## குடும்பத்தைத் திட்டமிடல்

குடும்பத்திட்டமிடல் கர்ப்பம் பாலியல் சம்பந்தமான கேள்விகள் இருப்பின் பேர்ண் மாநிலத்தில் பல பிரதேசங்களில் விஷேட ஆலோசனை நிலையங்களை அணுகலாம். இந்த இடங்களில் இலவசமாகவும் நம்பிக்கையானவையாகவும் கருத்தடை முறைகள், பாலியல் நோய்கள், விருப்பமின்றிய கர்ப்பம் அல்லது பாலியல் நோய்கள் பற்றிப் பேசலாம். இங்கு பிள்ளைகளுள்ள பெற்றோரும் பெற்றோராகவிருப்பவர்களும் போகலாம்.

## விவாகரத்து

விவாகரத்து (Scheidung|divorce) கணவன் மனைவி இருவருமாக இணைந்து அல்லது ஒருவரால் மட்டும் கோரப்படலாம். பிரதேச நீதிமன்றமே இதற்குப் பொறுப்பாகும். வெளிநாட்டில் மணம் முடித்தவர்களும் சுவிஸ் சட்டப்படி இங்கு விவாகரத்துப் பெறலாம். இதற்கு சுவிசில் ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய வாழ்க்கைத்தராதரத்தில் குறைந்தது 1வருடமாவது வாழ்ந்திருக்க வேண்டும். விவாகரத்து, குடியிருப்பு நிலை அல்லது அப்போது நடைமுறையிலிருக்கும் பிராஜாவுரிமைகோரல் நடைமுறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். விவாகரத்து பெற்ற வெளிநாட்டவர் சுவிசில் தொடர்ந்தும் வாழ்வதற்கு பலவிதமான நிபந்தனைக்கு உட்படவேண்டும். குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு விதிகள் பொருந்தும். விவாகரத்து பற்றிய தகவல்களை வாழ்க்கைத்துணை- மற்றும் குடும்ப ஆலோசனை நிலையம் அல்லது ஒரு சட்ட ஆலோசனை நிலையத்தில் பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/partnership-and-children/partnership

## வளர்ப்பு பற்றிய ஆலோசனை

பிள்ளை வளர்ப்புப் பற்றிய ஆலோசனை தேவைப்படுபவர்கள் பல விதமான ஆலோசனை நிலையங்களை நாடலாம். எல்லாப் பிரதேசங்களிலும் வளர்ப்பு பற்றிய ஆலோசனை நிலையங்கள் உள்ளன. அவை மாநிலத்தின் வேண்டுகோளின்படி பிள்ளைகள் உள்ள குடும்பத்திற்கு இலவச ஆலோசனை வழங்குகின்றன. இதைவிட தாய் - தந்தை ஆலோசனை பல கிராமசபைகளிலும் உதவுவதுடன், பால் குடிக் குழந்தைகளின் பராமரிப்பு பற்றிய விடயங்களுக்கும் உதவும். பெற்றோர் அவசரத்திற்கு ஆலோசனை பெற தொலைபேசி மூலம் அல்லது ஈ மெயில் (தொ.பேசி 0848 35 45 55 (சாதாரண கட்டணம்)www.elternnotruf.ch).

## தாய், தந்தையாருக்கான ஆலோசனை

"0 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்து, பராமரிப்பு, மேம்பாடு மற்றும் வளர்ப்பு பற்றிய இலவச ஆலோசனைகளை தாய் மற்றும் தந்தையர் ஆலோசனை வழங்குகிறது. ஆலோசனையானது மையத்தில், தொலைபேசி மூலமாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ நடைபெறுகிறது. உங்களுக்கு மொழித் தடைகள் இருந்தால், தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும் – நாங்கள் ஒரு தீர்வு காண்போம்!
தாய் மற்றும் தந்தைக்கான ஆலோசனை பற்றிய தகவல்கள் 16 மொழிகளில் கிடைக்கின்றன
தகவல் மற்றும் பதிவு: 031 552 16 16

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/partnership-and-children/being-a-parent

